நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மிக நீண்டக் காலமாக வழக்கத்தில் இருந்து வந்த அந்த வாய்மொழி குத்தகைப் பாட்ட விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டும். எனவே, உடனடியாக அந்த வாய்மொழி குத்தகைப் பாட்ட விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(ஆஉ) தாளவாடி மருத்துவமனை, பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதியில் எதிர்பாராமல் நேரிடும் விபத்துகளால் உயிரிழப்பு ஏற்படும்போது தாளவாடி மலைப் பகுதி அரசு மருத்துவமனையிலிருந்து சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்குச் செல்ல 70 கிலோ மீட்டர் தூரமும், கர்நாடக மாநிலம் சாமராஜ் நகருக்குச் செல்ல 50 கிலோ மீட்டர் தூரமும் ஆகிறது. எனவே, தாளவாடி மலைப் பகுதி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.*

(ஆஊ) திருமயம் தொகுதி, பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.*

திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதியிலிருந்து செல்கின்ற அரசு பேருந்துகளான பொன்னமராவதி—செங்கோட்டை, பொன்னமராவதி—சிதம்பரம், பொன்னமராவதியிலிருந்து துவரங்குறிச்சி வழியாக திருச்சிக்குச் செல்கின்ற பேருந்து, பொன்னமராவதி—கோயம்புத்தூர், பொன்னமராவதியிலிருந்து காலை 7 மணிக்கும், இரவு 7—30 மணிக்கும் சென்னைக்கு செல்கின்ற பேருந்துகள் ஆகிய பேருந்துகள் தொடர்ந்து நிறுத்தப்பட்டு வருவதால்*

அங்கேயிருக்கக்கூடிய பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஆள) பேரவையில் இருக்கை ஒதுக்குவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள்.*

திரு. ஜெ. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருக்கு என்னுடைய விண்ணப்பம். என்னுடைய இருக்கைக் குறித்து தங்களிடத்திலே எங்களுடைய கொறடா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை பற்றியெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள், உட்காருங்கள். அதை பற்றியெல்லாம் என்னுடைய அறையில் வந்து பேசுங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்.*

(ஆஏ) திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமம், மின்சாரம் தாக்கி உயிரிழந்த மற்றும் சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி, திருப்பாளனம் கிராமத்தில் செந்தில்குமார் என்ற பந்தல் அமைக்கும் தொழிலாளி, பந்தல் அமைக்கின்ற பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்திருக்கின்றார். ஏழ்மையான அவருடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.*

முற்பகல் 10–35

இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சை, வல்லம் பகுதியில் அரசுப் பேருந்தும் இரும்புக் கம்பி ஏற்றிவந்த ஆட்டோவும் மோதியதில் 10–க்கும் மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். அவர்கள் அனைவருமே கல்லூரி மாணவிகள். மிகக் கொடூரமான இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசின் சார்பில் இழப்பீடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதை உயர்த்தித்